## சுருக்கம்

பின்னேற்பு– கோயம்புத்தூர் மாநகராட்சி– காலியாக இருந்த நகர பொறியாளர் பணியிடத்திற்கு மதுரை மாநகராட்சி நகர பொறியாளரை கூடுதல் பொறுப்பு வகிக்குமாறு ஆணையிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு பின்னேற்பு வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை

அரசு ஆணை (பத்தாண்டு) எண்.520 நாள் 11–12–2008

திருவள்ளுவராண்டு 2039, கார்த்திகைத் திங்கள் 26 –ம் நாள்

படிக்க

1. அரசு ஆணை (பத்தாண்டு) எண்.404, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.4) துறை, நாள் 31–08–2007
2. ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி கடித எண்.10744/2007/எம்எம்1 நாள் 13–09–2007
3. நகராட்சி நிர்வாக ஆணையர் செயல்முறை எண்.45215/2007/எப்4 நாள் 20–9–2007
4. நகராட்சி நிர்வாக ஆணையர் கடித எண்.45215/2007/எப்4 நாள் 20–9–2007

ஆணை:-

கோயம்புத்தூர் மாநகராட்சி நகர பொறியாளராக பணியாற்றி வந்த திரு விராஜு 31–8–2007 அன்று பார்வை 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் பணிஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார். அதனால் நகர பொறியாளர் பணியிடம் காலியாக இருந்துவந்தது. இந்நிலையில் பார்வை 2ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் அவர்கள் ரூ.30 லட்சம் மதிப்பீட்டிற்கு மேற்பட்ட பணிகள் அம்மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்த திட்டங்களான மீன் அங்காடி, காய்கறி அங்காடி, மலர் அங்காடி மற்றும் புதிய நவீன பேருந்து நிலையம் ஆகிய கட்டுமானப் பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளதாகவும், காலியாக உள்ள நகரப் பொறியாளர் பதவிக்கு பதவி உயர்வு பெறத் தகுதிவாய்ந்த செயற் பொறியாளர் கோயம்புத்தூர் மாநகராட்சியில்

இல்லை எனவும், எனவே, மேற்படி பணிகளை விரைவாக செய்து முடிக்க ஏதுவாக, முறையாக நகரப் பொறியாளர் ஒருவரை நியமிக்கும்வரை தற்காலிகமாக மதுரை மாநகராட்சியில் செயற்பொறியாளர் அந்தஸ்தில் உள்ள நகரப் பொறியாளர் அவர்களை கோயம்புத்தூர் மாநகராட்சியில் நகரப் பொறியாளர் பணியிடத்திற்கு கூடுதல் பொறுப்பளித்து ஆணையிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையரைக் கேட்டுக் கொண்டார்.

2. கோயம்புத்தூர் மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்புத் திட்டப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு முக்கியப் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. 2-6-2000 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, அரசாணை (பத்தாண்டு) எண். 308-ன்படி நகரப் பொறியாளர் ரூ50 லட்சம் வரை மதிப்பீடு கொண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப ஒப்பளிப்பு வழங்க அதிகார வரம்பு உள்ளது. செயற்பொறியாளரின் வரம்பு ரூ.30லட்சம். எனவே கண்காணிப்புப் பொறியாளர் மட்டத்தில் கூடுதல் தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரம் கொண்ட அலுவலர் ஒருவரை கோயம்புத்தூர் மாநகராட்சி நகர பொறியாளர் பதவிக்கு பொறுப்பளிக்குமாறு கோரிய கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் கோரிக்கையின் அவசர முக்கியத்துவம் மற்றும் நிர்வாக நலன் கருதி, கோயம்புத்தூர் மாநகராட்சி நகரப் பொறியாளர் பணியிடத்திற்கு, முறையாக ஒருவரை அப்பணியிடத்தில் நியமிக்கப்படும்வரை, மதுரை மாநகராட்சியில் நகர பொறியாளராக பணியாற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் உள்ள அலுவலருக்கு கூடுதல் பொறுப்பு வழங்கி நகராட்சி நிர்வாக ஆணையர் பார்வை 3ல் படிக்கப்பட்ட தனது செயல்முறையில் ஆணையிட்டார். மேலும் பார்வை 4ல் படிக்கப்பட்ட தனது கடிதத்தில் தனது செயலுக்கு பின்னேற்பு வழங்குமாறு அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியிருந்தார்.

6. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலித்தது. அவசர முக்கியத்துவம் மற்றும் நிர்வாக நலன் கருதி, பார்வை 3ல் படிக்கப்பட்ட செயல்முறையில், மதுரை மாநகராட்சியில் நகர பொறியாளராக பணியாற்றும் கண்காணிப்புப் பொறியாளர் அந்தஸ்தில் உள்ள பொறியாளரை கோயம்புத்தூர் மாநகராட்சியில் காலியாக இருந்த நகரப் பொறியாளர் பதவிக்கு, முறையாக ஒருவரை நியமிக்கும் வரை, கூடுதல் பொறுப்பு வகிக்குமாறு ஆணையிட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் செயலுக்கு அரசு பின்னேற்பு வழங்குகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5
ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கோயம்புத்தூர்.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை–108
நகல்
நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கு (அ–2) துறை, சென்னை–9
அரசு செயலரின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, சென்னை–9.

ஆணைப்படி / அனுப்பப்படுகிறது

சேகமசேகரன்
பிரிவு அலுவலர்